| | | |
|---|---|---|
| | **தி/கிண்/ரீ.பி. ஜாயா மகளிர் மகா வித்தியாலயம்**<br>**முதலாந் தவணைக் கணிப்பீடு - 2020**<br>**செயன்முறைத் தொழிநுட்பத் திறன்** | **தரம்**<br>**09** |

| | |
|---|---|
| **சுட்டெண்:** | **நேரம் : 02 மணித்தியாலயம்** |

**பகுதி - I**

**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. முளைகட்டிய வித்துக்களை எத்தனை நாட்கள் நாம் உணவாகக் கொள்ளலாம்
   (1) 3-4 நாட்கள் (2) 1-7 நாட்கள் (3) 1-5 நாட்கள் (4) 3-5 நாட்கள்

2. பருவகால விளைச்சலை பருவமற்ற காலங்களில் சந்தைப்படுத்த பொருத்தமான முறை
   (1) நற்காப்புச் செய்தல் (2) பிளாஞ்சிங் செய்தல் (3) துண்டுகளாக்கல் (4) ஊறவைத்தல்

3. வரைறுக்கப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான பயிர்ச் செய்கை முறை
   (1) பயிர்ச் செய்கை கோபுரம் (2) சாடிப் பயிர்ச் செய்கை
   (3) நிலத்தில் மேற்கொள்ளும் பயிர்ச் செய்கை (4) ஒட்டுப் பயிர்ச் செய்கை

4. விவசாயத்தின் போது நீர் விரயமாதலைக் குறைக்கும் நீர்ப்பாசன முறை
   (1) குழாய் நீர்ப்பாசனம் (2) காய்வாய் நீர்ப்பாசனம்
   (3) மோட்டார் மூலமான நீர்ப்பாசனம் (4) துளிமுறை நீர்ப்பாசனம்

5. பூச்சி பீடைகளை விரட்டக்கூடிய உயிரியல் கட்டுப்பாடுத் தாவர வகைகள்
   (1) செவ்வந்தி, பாவட்டை (2) கடதசிப்பூ, செவ்வந்தி
   (3) கடுகு, கடதாசிப்பூ (4) முள்ளங்கி, மல்லிகை

6. கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்யும் முறை
   (1) 3T (2) 2R (3) 3R (4) 4R

7. உணவு உற்பத்திற்கான சர்வதேச, தேசிய சந்தை வாய்ப்புக்களை பெறும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்
   (1) சனத்தொகை வளர்ச்சி (2) தொழிநுடுப வளர்ச்சி
   (3) உலகமயமாக்கல் (4) சிறப்புச் சந்தை

8. விட்டினுள் அல்லது வீட்டின் வெளிப்புறத்தில் வைக்கக் கூடிய அலங்கார தாவர வகை
   (1) நுண் பூங்கா (2) மழையவர் பூங்கா
   (3) பொன் சாய் (4) மலர்ச் செடிகள்



kalvi.lk

9. பழ வகைகள் அதிகமாக காணப்படும் மாகாணம்

(1) மேல் மாகாணம் (2) வடமாகாணம்

(3) ஊவா மாகாணம் (4) கிழக்கு மாகாணம்

10. வெட்டப்பட்ட அன்னாசித்துண்டுகளுடன் சித்தரிக் அமிலம் சேர்த்து எத்தனை நிமிடங்கள் நீரில் அமிழ்த்த வேண்டும்.

(1) 3 நிமிடம் (2) 5 நிமிடம் (3) 7 நிமிடம் (4) 10 நிமிடம்

**இடைவெளி நிரப்புக.**

பயிர்ச் செய்கை விங்கு வளர்ப்பு, ISO, வனச் செய்கை, 0.1%, கூம்பக பயிர்ச் செய்கை

1. இயற்கைக் காட்டில் காணப்படும் இயற்கை வளங்களை உருவாக்கும் நோக்குடன் தாவரங்களை வளர்க்கும் செயற்பாடு ................................................... என அழைக்கப்படும்.
2. விவசாயத்தில் உள்ளடங்கும் பகுதிகள் ...................................... ஆகும்.
3. வரையறுக்கப்பட்ட இடங்களுக்கு பொருத்தமான பயிர்ச் செய்கை முறை ............................... ஆகும்.
4. சர்வதேச ரீதியில் வழங்கப்படும் சான்றிதழ் ...................................... ஆகும்.
5. காய்கறிகள், பழங்களை சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தும் நீரில் ........................... வீதம் குளோரின் காணப்படும்.

**சரி (✓) பிழை (✕) இடுக.**

1. அன்னாசிப்பழத்தை இழிவு நிலையில் பதப்படுத்தும் போது சித்தரிக் அமிலக் கரைசல் 0.1% சேர்க்கப்படும் ( )
2. தாவர மற்றும் விலங்குகளின் உடற்பாகங்களின் மூலம் உருவாகும் பதார்த்தங்கள் உயிர்த்திணிவு ஆகும். ( )
3. இலங்கையில் வழங்கப்படும் தரச்சான்றிதழ் ISO ஆகும். ( )
4. பழங்கள், காய்கறிகளை குழுவிச் சுத்தம் செய்வதற்கு குளோரின் நீர் பொருத்தமானதாகும். ( )
5. காடுகளின் மூடுபடைகளை அகற்றுவதனால் உயிர்ப் பல்வகைமை அழிவுறாது. ( )



kalvi.lk

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01.

i. பொன்னாங்கணிக் கீரைத்தண்டின் 3 பகுதிகளும் எவை?

ii. வீட்டுத்தோட்டத்தின் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை?

iii. வரையறுக்கப்பட்ட இடத்திற்கு பொருத்தமான பயிர்ச் செய்கை முறைகள் 3 தருக.

02.

i. வளங்கள் என்றால் என்ன?

ii. செயற்றிட்டத்தின் பிரதான கூறுகள் 3 தருக.

iii. உணவு உற்பத்தியை அதிகரிக்க விவசாயத்துறையில் பயன்படுத்தும் நுட்பமுறைகள் 3 தருக.

iv. காடுகளின் மூடுபடைகளை அகற்றுவதனால் ஏற்படும் பாதிப்புக்கள் 3 தருக.

03.

i. மண் வளங்குன்றல் என்றால் என்ன?

ii. சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விவசாய நடவடிக்கைகள் 3 தருக.

iii. பூச்சிப் பீடைகளை விரட்டக்கூடிய பயிர்கள் 3 தருக.

iv. பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பிராணிகள் 3 தருக.

04.

i. கிழக்கு மாகாணத்தில் அதிகமாக காணப்படும் உணவுகள் 3 தருக.

ii. உணவினை நுகரும் நுகர்வோரின் எதிர்பார்ப்புக்கள் 3 தருக.

iii. சிறந்த உணவு உற்பத்தி பழங்களின் பிரதான பிரிவுகள் எவை?

05.

i. கூட்டுப்பசளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட முறைகள் 3 தருக.

ii. உணவு பொதியிடலுக்கு பயன்படுத்தும் பொருட்கள் 3 தருக.

iii. கூடுடித்துண்டில் உள்ளடங்கும் விடயங்கள் 3 தருக.



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page